புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜுன் 19, 2025 • புரட்சி 25 • முழக்கம் 26 • விலை ரூ.6.00



## தேசிய கூட்டணியில் முருக பகவான்

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணையப் போகின்றன என்று எடப்பாடியும் நயினாரும் பேசாத நாள் இல்லை. அது வந்தே விட்டது கூட்டணிக்குள் கட்சிகளை இழுக்க அமித் ஷாவின் கீழ் இரண்டு படைகள் தயார் நிலையில் உள்ளன. ஒன்று, அமலாக்கப்படை! மற்றொன்று மத்திய புலனாய்வுப் படை! இப்போது மூன்றாவதாக ஒரு படை கிளம்பியுள்ளது, இது அறுபடை.

ஆமாம்! தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேரப்போகிறார் முருக பகவான். மதுரை மாநாட்டுக்கு அறுபடை வீடுகளுடன் முருகன் வந்து சேர்ந்து விட்டார்! அதுவும் தனது மயில் வாகனத்தில், விபத்துக்கள் ஏதும் இன்றி பாதுக்காப்பாக வந்து விட்டார்! மாநாட்டுக்கு மாதிரி கோயில்களை முகப்புகளாக்கி அங்கே பூஜை சடங்குகளோடு பிரசாதம் வழங்கப் போகிறார்களாம். இது ஆகமத்துக்கு எதிரானது என்று அனைத்து ஜாதி அர்ச்சகர் சங்கம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. "இது எங்கள் கட்சி முருகன்; ஆகம முருகன் அல்ல" என்று வாதாடி நீதிமன்றத்தின் அனுமதியையும் பாஜகவினர் வாங்கி விட்டார்கள்.

“ஏற்கெனவே இதிகாச ராமனை நாங்கள் எங்கள் கட்சியில் சேர்த்துவிட்டோம்: இப்போது முருகனையும் உறுப்பினராக்கி விட்டோம். இந்து கடவுள்கள் எல்லாமே பாஜகவின் நிரந்தர உறுப்பினர்கள்தான்” என்கிறார்கள் இந்த ’இந்து காவலர்கள்’.

பழனியில் அமைச்சர் சேகர்பாபு நடத்திய மாநாட்டில் தமிழ்நாடு அரசின் கூட்டணியில் இருந்த முருகன் இப்போது தேசிய கூட்டணிக்கு மாறி விட்டானா? என்று கேட்டால் ஏன் முருகன் கூட்டணி மாறக்கூடாதா?என்று கேட்கிறார்கள். நியாயம்தான்.

அரசியல் முருகனுக்கும் ஆகம முருகனுக்கும் என்ன வேறுபாடு? ஆகம முருகன் பார்ப்பன மந்திரத்திற்கு கட்டுப்பட்டவன்: அரசியல் முருகன் பார்ப்பனிய கூட்டணிக்கு கட்டுப்பட்டவன்: அவ்வளவுதான்.

பாஜக தலைவர் நயினார் கூட்டணி இணைப்புக்காக விரதத்தை துவங்கி விட்டாராம். இணைப்புக்கு வரும் சங் பரிவாரங்களும் இதேபோல் சடங்குகளை பின்பற்றலாம் என்பது நமது தாழ்மையான யோசனை.

காவடி தூக்கிக் கொண்டு வரலாம்,
காவி கட்டி, ’மோடிஜீ வாழ்க: திமுக ஒழிக’ என்று பக்தி பரவசத்தோடு பாதயாத்திரை வரலாம்.

‘பாஜக ஆட்சி அமைப்போம்’ என்று அண்ணாமலை ஆதரவு முருக பக்தர்கள் முழக்கமிடலாம். நயினார் ஆதவாளர்கள் ’எடப்பாடிதான் முதல்வர்: பாஜகவினர் தான் அமைச்சர்கள் என்று அண்ணாமலைக்கு எதிராக வேண்டுதல் செய்யலாம்’.

2026-ல் எங்கள் ஆட்சிதான் என்று மொட்டை அடிக்கலாம். ஆனால் எது செய்தாலும் எது முருகன் நாக்கில் வேல் குத்தியே நிற்பான். அதாவது முருகன் வாய்திறக்கப் போவதில்லை. அப்படியே பேசினாலும் என்ன கேட்பான்? " பக்தர்களே! கடந்த தேர்தலிலேயே எனக்காக வேல் யாத்திரை நடத்தி படுதோல்வியை சந்தித்தீர்களே! அதற்குள் மறந்துவிட்டீர்களா? என்றுதான் கேட்பான்".

உபி முதல்வர் ஆதித்யனாத் உட்பட பாஜக முன்னணி தலைவர்கள் வருகிறார்களாம். மாலை 6 மணிக்கு ஒரே நேரத்தில் அனைவரும் ’கந்த சஷ்டி கவசம்’ பாடப் போகிறார்களாம். நினைவு இருக்கிறதா? கந்த சஷ்டி கவசத்தை உள்ளது உள்ளடியே கூறினார்கள் என்பதற்காக கருப்பர் கூட்டம் என்ற யூடியூப் சேனல் நடத்தியவர்களை எடப்பாடியை மிரட்டி குண்டர் சட்டத்தில் கைது செய்ய வைத்தவர்கள் இதே முருக பக்தர்கள்தான். இப்போது இவர்கள்தான் கந்த சஷ்டி கவசத்தை பாடப் போகிறார்களாம். அதிலுள்ள அடல்ட்ஸ் ஒன்லி வாசகங்களை நீக்கிவிட போகிறார்களா?

அண்மைக் காலமாக வடிவேலு படங்கள் வரவில்லையே என்ற ஏக்கத்தில் இருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள். அவர்களுக்கு நல்ல காமெடி படத்தை மதுரையில் ஒட்டுகிறது பாஜக. அரோகரா........

-கோடங்குடி மாரிமுத்து.

## ஒன்றிய ஆட்சியின் திட்டங்களுக்கு மாநில அரசே செலவிடுகிறது

### ஆதாரங்களுடன் ஆங்கில நாளேடு கட்டுரை

தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதி தர மறுத்து வரும் ஒன்றிய ஆட்சி, மற்றொரு உண்மைக்கு மாறான செய்தியை பரப்புகிறது. ஒன்றிய ஆட்சியின் திட்டங்களை தமிழ்நாடு அரசு தனது திட்டங்களாக அறிவிக்கிறது என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பாஜகவினர் கூறி வருகிறார்கள்.

மோடியின் படத்தோடு அறிவிக்கப்படும் திட்டங்களுக்கு கூடுதல் நிதியை தமிழ்நாடு அரசுதான் செலவிட்டு வருகிறது என்பதே உண்மை. இதுகுறித்து இந்து ஆங்கில நாளேடு விரிவான செய்தியை வெளியிட்டு உள்ளது.

“ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கான எந்தப் புதிய சிறப்புத் திட்டத்தையும் தரவில்லை. அவர்கள் மிகச் சில திட்டங்களுக்கு ஒதுக்கும் பணமும் முழுமையாக இல்லை. அதில் கூடுதல் பணம் போட்டு மாநில அரசுதான் அந்த திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. குடிநீர் திட்டமாக இருந்தாலும்- வீடுகட்டும் திட்டமாக இருந்தாலும் - ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை வைத்து செயல்படுத்த முடியாது என்பதால் மாநில அரசுதான் கூடுதல் பணம் கொடுக்கிறது. சில திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை விட மாநில அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை அதிகம். ‘படையப்பா படத்தில் ரஜினி - செந்தில் காமெடி பார்த்திருப்பீங்க... ‘மாப்பிள்ளை அவர்தான் ஆனா சட்டை என்னுது’ - என்பார் ரஜினி. அது போலத்தான் ஒன்றிய அரசு பெயரிலான திட்டத்துக்கும் நிதி கொடுத்து வருகிறோம். ஆனால் அப்படியே பிளேட்டை திருப்பிப் போடுகிறார் உள்துறை அமைச்சர்”என்று உண்மையை வெளிச்சம் போட்டுச் சொல்லி இருந்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY), பிரதமர் மீன்வளத் திட்டம் (PMMSY), உயிர்நீர் (Jaljeevan) எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் அவர்களைக் காட்டிலும் அதிகமாக தமிழ்நாடு அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்கிறது என்பதை ‘இந்து’ ஆங்கில நாளேடு அம்பலப்படுத்தி இருக்கிறது. ஒன்றிய அரசின் 6 திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசின் பங்கு கூடுதலாக உள்ளது என்று அந்தக் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

*ஜல் ஜீவன் திட்டத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் சமமாக செலவுகளை பகிர்ந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இதனை செயல்படுத்தும் போது, மாநில அரசின் பங்களிப்பு 55 சதவீதமாக உள்ளது.

முதியோர் மற்றும் கைம்பெண் ஓய்வூதியத் திட்டங்களுக்கு 79 வயது வரை உள்ளவர்களுக்கு ஒன்றிய அரசின் பங்கு 300 ரூபாயாகவும், 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 500 ரூபாயாகவும் உள்ளது. ஆனால், இத்திட்டப் பயனாளிகளுக்கு ஆயிரத்து 200 ரூபாயை மாநில அரசு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான தனது திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஆயிரத்து 500 ரூபாயை ஒவ்வொரு மாதமும் வழங்கி வருகிறது.

பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு மாநில அரசு செலவிடும் மொத்த தொகை 2 லட்சத்து 83 ஆயிரத்து 900 ரூபாய் ஆக உள்ளது. இதில், ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் என அறிவிக்கப்பட்டநிலையில், ஒன்றிய அரசு 50 சதவீதத்திற்கும் குறைவாகவே நிதி அளிக்கிறது.

100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் எனும் கழிப்பறை கட்டுவதற்கான திட்டங்களுக்கு கடந்த நிதியாண்டில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 39 சதவீதமாகவும், மாநில அரசின் பங்களிப்பு 61 சதவீதமாகவும் இருக்கிறது.

பிரதமர் பெயரில் உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இத்திட்டத்தில், ஒன்றிய அரசின் பங்கு 27 சதவீதமாகவும் மாநில அரசின் பங்கு 73 சதவீதமாகவும் உள்ளது. இதுதான் ‘இந்து’ நாளேடே உறுதிப்படுத்திய உண்மைகள் ஆகும். ஜல்ஜீவன் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் நிதி 55 விழுக்காடு தரப்படுகிறது. பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் நிதி 50 விழுக்காட்டுக்கு மேல் தரப்படுகிறது. 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் எனும் கழிப்பறை கட்டும் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதி 61 விழுக்காடு தரப்படுகிறது.
பிரதமர் பெயரில் உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான திட்டத்துக்கு தமிழ்நாடு அரசு 73 விழுக்காடு நிதி தருகிறது. திட்டம் அவர்களுடையது, நிதி தமிழ்நாடு அரசினுடையது. இதை வைத்துத்தான், ‘மாப்பிள்ளை அவருதான், சட்டை என்னுடையது’ என்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய நிதியைத் தருகிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ், ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெற வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிலுவையிலேயே உள்ளது. இது மாநில அரசின் நிதிச்சுமையாக மாறிவிட்டது. தேசிய உயர்கல்வி இயக்கத்தின் (RUSA) கீழ் செயல்படுத்தப்படும் திட்டங் களின்மீதும் புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு திணிப்பதால், ஏற்பட்ட விளைவு இது.

ஃபெஞ்சல் புயலானது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைக் குறிப்பிட்டு, தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு 6,675 கோடி ரூபாய் தேவைப்படும் என கேட்கப்பட்டது. நிதி வரவில்லை. மிக்ஜாம் புயல் தாக்கியது. அதற்குக் கேட்ட நிவாரணமும் வரவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட மூன்று இயற்கைப் பேரிடருக்கு மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒருசதவீதம்கூட இதுவரை தரப்படவில்லை. நமக்கு வரவேண்டியதும் வரவில்லை. அவர்கள் தர வேண்டியதும் தரவில்லை. இதுதான் ஒன்றிய அரசின் வஞ்சக ஆட்சிக்கு சாட்சியங்கள் ஆகும்.

## தமிழ்நாடு முதல்வருடன் கழகத் தலைவர் சந்திப்பு!



தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுடன் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் 12.06.25 வியாழன் அன்று மேட்டூரில் மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது "குடியரசு 100" எனும் தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் வெளியிட்ட 3 புத்தகங்கள் அடங்கிய தொகுதியை கழகத் தலைவர் அவர்கள் முதல்வருக்கு வழங்கினார்.

மேலும் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் அவர்கள் புரட்சிப் பெரியார் முழக்கத்தில் வெளிவந்த தலையங்கங்களின் தொகுப்பாக கழகம் வெளியிட்ட "ஆரிய மாடலா? திராவிட மாடலா?" நூலை முதல்வருக்கு வழங்கினார்.

இச்சந்திப்பின் போது மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர், திமுக சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் செல்வகணபதி, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், மேட்டூர் சக்திவேல், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், சேலம் மாவட்ட அமைப்பாளர் அன்பு ஆகியோர் உடன் இருந்தனர்.

### தலையங்கம்

## 100 விழுக்காடு!

கல்விக்காக இந்து வேத மதம் தனித்துறை ஒன்றை உருவாக்கி அதன் அதிகாரத்தை சரஸ்வதி என்ற கடவுளுக்கு ஒதுக்கியது, பள்ளிகளில் சரஸ்வதி படமாக தொங்கினார். ஆனால் ‘சூத்திர’மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது.

கல்விக்காக ஒரு கடவுள் இருந்தும் ஏன் மக்களுக்கு கல்வி கிடைக்கவில்லை என்ற கேள்வியை பெரியார் இயக்கம் கேட்டது. ‘சூத்திரர்களுக்கு’ கல்வியை தராதே என்ற மனுதர்மத்தை அமல்படுத்துவதிலேயே தான் பார்ப்பனர்கள் குறியாக இருந்தார்கள். 1952-ல் தேர்தலில் நிற்காமல் மேலவை வழியாக முதலமைச்சர் பதவிக்கு வந்த ராஜகோபாலாச்சாரி தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு ஜாதித் தொழிலை பயிற்றுவிக்கும் குலக்கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பெரியார் இயக்கம் போராடி அதை ஒழித்தது.

சென்னை திருவான்மியூரில் நடந்த சலவைத் தொழிலாளர் மாநாட்டில் "நீங்கள் படிக்க வந்து விட்டால் துணி துவைக்கும் தொழிலை யார் செய்வது?" என்று கேட்டார் ராஜகோபாலாச்சாரி. சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்தியதால் ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரிகட்ட 6000 அரசுப் பள்ளிகளை அவர் மூடினார். இந்த கல்வித் தடைகளை எதிர்த்து பெரியார் இயக்கம் தொடர்ந்து போராடியது. நீதிக்கட்சி ஆட்சியில் 1928-இல் அமைச்சர் முத்தையா முதலியார் கொண்டு வந்த வகுப்புரிமை ஆணையை ‘சுதந்திர’ இந்தியாவில் பார்ப்பனர்கள் உச்ச நீதிமன்றம் வழியாக ஒழித்தனர்.

1950-ல் நீதிமன்றம் வகுப்புரிமை ஆணையை தடை செய்தது. பெரியார் போர்ச் சங்கு ஊதினார். திமுகவும் களமிறங்கியது.

இதற்காக 1951-இல் முதன்முறையாக இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியோருக்கு இட ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் இந்த சமூக நீதி போராட்டத்துக்கு காமராசரும், பிரதமர் நேரும், சட்ட அமைச்சர் அம்பேத்கரும் உறுதியாக ஆதரவு தெரிவித்தனர் என்பது வரலாறு.

சமூக நீதியில் இந்தியாவுக்கே வழிகாட்டும் மாநிலம் தமிழ்நாடு என்பது பெருமைக்குரிய ஒரு அடையாளமாகும். சமூக நீதியை உறுதிப்படுத்தும் சமூகச் சூழலை உருவாக்கும் திட்டங்களை இப்போது ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அமல்படுத்தி வருகிறது.

பள்ளி இடைநிற்றலை ஊக்குவித்து, தொடர் கல்விக்கு தடையாக நிற்கும் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தமிழ்நாடு அரசு எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றிகளை குவித்து வருகின்றன. பள்ளிப் படிப்பை தொடராமல் இடை நிற்கும் மாணவ, மாணவியர்களை நேரில் கண்டறிந்து அவர்களை கல்வி அமைப்புக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ‘திராவிட மாடல்’ ஆட்சி தீவிரம் காட்டி வருகிறது.

எழுத்தறிவு இல்லாதவர்களே தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்ற இலக்கு நோக்கிய செயல் திட்டத்தில் தமிழ்நாடு இப்போது முதல் இடத்தில் வந்து சேர்ந்திருக்கிறது. எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு என்ற மதிப்பீட்டுத் தேர்வு திட்டத்தை ஒன்றிய ஆட்சி அமல்படுத்துகிறது. அதற்காக மதிப்பீட்டுத் தேர்வு முறை ஒன்றை உருவாக்கி நாடு முழுவதும் நடத்துகிறது. இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஐந்து லட்சம் பேர் தேர்வுகளை எழுதி 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

இந்தியாவிலேயே இதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. நாடு முழுவதும் தேர்ச்சி பெற்றவர்கள் 19.4 விழுக்காடுதான். ஆனால் தமிழ்நாடு மட்டும் 100 விழுக்காடு எட்டி இருக்கிறது. இது எப்படி சாத்தியமானது?

தமிழ்நாட்டில் சமூக நீதிக் கொள்கை உருவாக்கிய பண்பாட்டுச் சூழல் தான் இதை சாத்தியமாக்கி இருக்கிறது. குடும்பத்தினரின் ஊக்கம், பஞ்சாயத்துகள் ஆர்வம், தேர்வுக்கு முந்தைய தயாரிப்புகள், உள்ளூர் தன்னார்வ குழுக்களின் செயல்பாடுகள் இவை எல்லாம் உந்து சக்திகளாக இயங்கி இந்த வெற்றியை சாதித்து உள்ளன. ஜாதியப் பார்வையில் தேர்ச்சி பெற்ற ஐந்து லட்சம் பேரும் சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்கள். இதில் பெண்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். இந்த சாதனைக்கு காரணமான பள்ளிக்கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் பாராட்டுகளை தெரிவித்துள்ளார். 39 மாவட்டங்களில் இதற்கான இயக்கங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக எஞ்சி இருப்போர் 10 லட்சம் பேர் மட்டுமே. இவர்களும் வரும் நவம்பர் மாதத்திற்குள் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றப்படுவார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டு வரும் நான் முதல்வன் திட்டம் மகத்தான சாதனைகளை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில் தொழில் நுட்ப பயிற்சி பெற்ற பல லட்சம் பேர் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர். அய்.ஏ.எஸ், அய்.பி.எஸ் குடிமைப் பணிகளுக்கான முதல்நிலை தேர்வில் அரசு வழங்கும் ஊக்கத் தொகையின் காரணமாக தேர்ச்சி பெற்ற எண்ணிக்கை 315 ஆக இவ்வாண்டு அதிகரித்துள்ளது. 9 ஆண்டுகளுக்குப் பிறகு அதிக அளவு தேர்ச்சி விகிதம் இதுதான்.

திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் 1967-இல் எழுதப் படிக்க தெரிந்தவர்கள் 31.4 விழுக்காடு மட்டுமே. திராவிட இயக்கம் என்ன செய்து கிழித்தது என்று கேட்போருக்கு இந்த 100 விழுக்காடு சாதனையே பதில்.

## அசைவ இந்துக்களை அவமதிக்கும் பார்ப்பனியம்!

*திருவண்ணாமலை கோயில் வளாகத்தில் கிராமத்தில் இருந்து வந்த ஒரு தம்பதியினர் முட்டை பிரியாணி சாப்பிட்டார்கள் என்பதற்காக கோயில் தீட்டாகிவிட்டது என்று கூறி, தீட்டு கழிக்கும் சடங்குகளையும் யாகங்களையும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.*

*திருவண்ணாமலை கோயிலுக்கு வரும் பெரும்பாலான பக்தர்கள் அசைவம் சாப்பிடுகிறவர்கள்தான்!*

*அவர்களை கடவுள் ஏற்றுகொள்கிறார், ஆனால் அவர்கள் சாப்பிடுகிற அசைவ உணவு ஆண்டவனுக்கு தீட்டு என்று சொல்லி அசைவ உணவுக்காரர்களையே ஆரியம் அவமதிக்கிறது.*

*ஆண்டவனின் உணவு பியூர் வெஜிடேரியன் என்று இவர்களுக்கு யார் சொன்னது? அர்ச்சகராக இருக்கிறவர்கள் சைவ உணவுக்காரர்களாக இருக்கிறார்கள், என்பதற்காக கடவுளையும் சைவத்திற்கு இவர்கள் மாற்றிக் கொண்டு விட்டார்களா?*

*அசைவ உணவுக்காரர்கள் கோயிலுக்குள் வரக்கூடாது என்று சொன்னால் கோயில்களை இழுத்து மூடி விட வேண்டியதுதான்.*

*பெரும்பான்மை மக்களை இப்படி புண்படுத்துகிறவர்கள்தான் இந்துக்களைப் புண்படுத்துகிறார்கள் என்று அவ்வப்போது கூச்சல் போட்டு வருகிறார்கள்.*

*மதக்கலவர நோக்கத்தோடு மதுரையில் முருகன் மாநாட்டை நடத்துகிறது பாரதிய ஜனதா கட்சி. முருகன் தமிழ்க் கடவுள் என்று வேதவாதிகள் தொலைக்காட்சிகளில் பேசுகிறார்கள். ஆனால் வேதவாதிகள் எவரும் முருகன் என்ற தமிழ்ப் பெயரை சூட்டிக் கொள்வதில்லை. சமஸ்கிருத மயமாக்கப்பட்ட சுப்ரமணியன், ஸ்கந்தன், கார்த்திகேயன் என்றுதான் பெயரிடுவார்கள்.*

*சுப்பிரமணியன் என்று சொன்னால் சுத்தமான பிராமணன் என்று மறைந்த காஞ்சி சங்கராச்சாரி விளக்கம் தந்திருக்கிறார். தமிழ்க் கடவுளை இப்படி பார்ப்பனியம் விழுங்கி ஏப்பம்விடுகிறது.*

*சட்டத்தில் தீண்டாமை குற்றம்; ஆனால் இந்து சமயத்தில் தீண்டாமை புனிதம்.*

*கோயில் வளாகத்துக்குள் அசைவத்தை தீட்டு என்று கூறுகிறவர்கள், கோயில் இருக்கும் ஊரிலேயே அசைவம் தீட்டு என்று அறிவிக்கும் காலம் வந்தாலும் வியப்பதற்கு இல்லை. அயோத்தியில் இது தொடங்கிவிட்டது. தசையும் எலும்பும் தீட்டு என்று சொன்னால் மனிதர்களே தீட்டுதான்; அவர்களின் உடல் செடி கொடிகளின் சைவம் அல்ல."*

## கடவுளுக்கு மனிதநேயம் கிடையாதா?

*எதிர்காலக் கனவுகளையும் மகிழ்ச்சியான உணர்வுகளையும் சுமந்து சென்ற 246 மனித உயிர்கள் பலியாகி விட்டன.*

*ஏர் இந்தியாவின் போயிங் 787 விமானம் விழுந்து நொறுங்கியது, என்ற செய்தி மனிதத்தை இடித்து நொறுக்கி விட்டது. ஏர் இந்தியா நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன் டாட்டாவிடம் விலை பேசி விட்டது இன்றைய ஆட்சி. தற்போது ஒன்றிய ஆட்சியின் நிர்வாகத்தின் கீழ் எந்த ஒரு விமான சேவையும் இல்லை.*

*விபத்துகள் நிகழவில்லை என்றாலும் போயிங் 787 விமானம் பாதுகாப்பானது அல்ல என்ற குற்றச்சாட்டுகள், 2011-ஆம் ஆண்டிலிருந்து வரத் துவங்கி விட்டன; பயணிகள் சேவை; விமான கட்டமைப்பு கோளாறு; தரமற்ற உதிரி பாகங்கள்; இணைப்புக் கோளாறு என்று தொழில்நுட்ப ரீதியாகவும் சேவை ரீதியாகவும் குற்றச்சாட்டுகள் வரத் துவங்கின,... ஏர் இந்தியா நிறுவனம் இவைகளை தொடர்ந்து மறுத்து வந்தது.*

*இந்த விமான உற்பத்தி நிறுவனத்தில் பணியாற்றிய இரண்டு பொறியாளர்கள் இதன் ஆபத்து குறித்து பிபிசி நிறுவனத்திற்கு பேட்டி அளித்தனர். ஒருவர் லண்டன் நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடர்ந்து அடுத்த ஒரு வாரத்தில் மரணம் அடைந்து விட்டார்.*

*பாதுகாப்பு குறைபாடுகளை சுட்டிக்காட்டி போயிங் நிறுவன ஊழியர்களே 2019 இல் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். ஏர் இந்தியா நிறுவனம் குற்றச்சாட்டுகளை மறுத்தது ஒன்றிய ஆட்சியும் கண்டுகொள்ளவில்லை.*

*எல்லாவற்றிற்கும் மேலாக வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் இந்த விபத்துக்கு காரணம் கடவுளும் விதியும்தான் என்று அமித் ஷா கூறி இருக்கிறார். காங்கிரஸ் கட்சி இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறது.*

*காயமடைந்தவர்களும் பயணத்தைத் தவறவிட்ட ஒரு பெண்ணும் தங்களை கடவுள் காப்பாற்றினார் என்று கூறுவது கடவுளையே அவமதிப்பதாகும். அப்படியானால் இந்த 246 பேரையும் மரணிக்க வைத்தது கடவுளா? கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவருக்கு மனித நேயமே கிடையாதா? என்ற கேள்விகளை எழுப்பியாக வேண்டும்.*

*குஜராத் முன்னாள் முதலமைச்சரும் பாஜக தலைவருமான ரூபாணி மரணம் அடைந்தவர்களில் ஒருவர். தனது ராசி எண் 1206 என்று அவர் நம்பியவர். தனது அனைத்து வாகனங்களிலும்அதையே பதிவு செய்தார் ஆனால் அதே 6-ம் மாதம்12-ம் தேதி அவர் மரணத்தைத் தழுவி விட்டார்! ராசி எண் அவரைக் காப்பாற்ற வரவில்லை.*

*கடைசி நேர உரையாடல்களையும் பாதுகாப்பு குறைபாடுகளையும் பதிவு செய்யும் கருப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தப் பெட்டியை ஆராயும்போது விபத்துக்கான காரணம் தெரியும்.*

*கடவுளும் விதியும்தான் என்று அமித் ஷா கூறுவதை அந்த கருப்புப் பெட்டி நிச்சயம் கூறாது ! அது இந்துத்துவ தயாரிப்பு அல்ல! அதற்கு கடவுளோ மதமோ ஜாதியோ தலை விதியோ தெரியாது அறிவியலைத் தான் பதிவு செய்யும்.*

-விடுதலை இராசேந்திரன்.


## நாத்திகர்கள் எண்ணிக்கை உயர்வு!

**உலகளவில் மத நம்பிக்கையில் இருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது Pew Research Centre நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. 2010–2020 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் 27 கோடி பேர் தங்கள் மதத்தில் இருந்து வெளியேறியுள்ளனர். நாத்திகர்களின் மொத்த மக்கள் தொகை 190 கோடியாக உயர்ந்துள்ளது. அய்ரோப்பா, யு.எஸ்.ஏ., ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள கிறித்தவர்களே பெரும்பாலும் மத நம்பிக்கையில் இருந்து வெளியேறியுள்ளனர்.**

# நாத்திகர் மரபு: நீதிமன்றம் தரும் வெளிச்சம்

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை(3)

***2014 ஆகஸ்ட்18-ம் தேதி மேட்டூரில் கழக சார்பில் நடந்த நாத்திக பேரணிக்கு முதலில் காவல்துறையில் அனுமதி மறுத்தது நீதிமன்றம் வழியாக அனுமதி பெறப்பட்டது நீதிமன்ற தீர்ப்பை முன்வைத்து புரட்சி பெரியார் விளக்கம் நாத்திக மரபு நீதிமன்றம் தரும் வெளிச்சம் என்ற தலைப்பில் எழுதிய தலையங்கம் இது....***




திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி முடித்த மேட்டூர் நாத்திகர் பேரணிக்கும் வழமைபோல காவல்துறை அனுமதி மறுத்து. உயர் நீதிமன்றத்தின் வழியாக அனுமதி பெற வேண்டியிருந்தது. விநாயகர் சதுர்த்தியைக் காரணம் காட்டி காவல்துறை கூறிய விளக்கத்தை ஏற்க மறுத்த உயர்நீதிமன்ற நீதிபதி தமது ஆணையில் நாத்திக மரபு குறித்துப் பதிவுசெய்துள்ள கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

"ஆத்திகம்-நாத்திகம் இரண்டுமே இந்திய மரபில் ஒன்றுக்கொன்று உதவி வந்திருக்கிறது. இரண்டில் எந்த ஒன்றையும் ஒழிக்கவோ. புறந்தள்ளவோ முடியாது, இரண்டு கருத்தியல்களும் ஒன்றை ஒன்று எதிர்த்தாலும், இரண்டுமே சமூகப் பிணைப்பை வலிமைப் படுத்து வதற்கான இழையோட்டத்தை வழங்கி யிருக்கிறது." எனவே, இதுபோன்ற ஊர்வலங்களும் (நாத்திகப் பேரணி) சமூகச் செயல்பாடுகளுக்கான பங்களிப்புகளை வழங்கிக் கொண்டிருக்கிறது" - என்று நீதிபதி வி.இராம சுப்பிரமணியன் அனுமதிக்கான ஆணையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

சமூக மாற்றத்துக்கு முரண்பாடுகளுக்கிடையிலான போராட்டத்தை கூர்மையடையச் செய்தல் அவசியம் என்ற கண்ணோட்டத்தோடு உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை நாம் வரவேற்கிறோம்.

'வேதம்' ஆரிய பார்ப்பனர்களால் திணிக்கப்பட்ட காலத்திலிருந்தே வேத மறுப்பு இயக்கங்களும் தொடர்ந்து நடந்து வந்திருப்பதே சமூக வரலாறு. இதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. வேதங்களை எதிர்த்து 'வைசேஷிகம்'. 'நியாயம்'. 'சாங்கியம்'. 'யோகம்' போன்ற சிந்தனை மரபுகள் பகுத்தறிவுச் சிந்தனைகளை முன் வைத்தன. அவர்கள் இயற்கையின் இரகசியங்களை ஆராய்ந்தார்கள், குறிப்பாக 'சாங்கிய தத்துவம்' உலகம் 'கடவுளால்' படைக்கப்பட்டது என்ற கருத்தை முழுமையாகப் புறந்தள்ளியது. சாங்கியம்-வலிமையாக முன்வைத்த 'நாத்திக' சிந்தனைகளைக் கண்டு அஞ்சிய வேதகாலப் பார்ப்பனர்கள், அந்தச் சிந்தனைகளைக் கூறு போட்டுப் பிரித்து, 'வேத'ங்களின் கருத்துகளைத் திணித்து, சாங்கி யத்தை வேதாந்தங்களுக்குள் முடக்கிவிட்டதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். 'கருத்து முதல் வாதம்-பொருள் முதல் வாதம்' என்ற அடிப்படை யிலேயே வேதப் பார்ப்பனர் களுக்கும் அதை எதிர்த்த நாத்திக மரபினருக்கும் வாதங்கள் நடந்துள்ளன. 'உலகாயதம்' என்ற கோட்பாட்டை முன் வைத்த 'சார்வாகம்', கடவுள், மறுபிறப்பு ஆகியவற்றை மறுத்ததோடு. வாழ்க்கை வாழ்வதற்குத்தான்; துறப்பதற்கு அல்ல; அனுபவமும், அறிவுமே. வாழ்க்கைக்கான வழிகாட்டிகள் என்ற கருத்துகளையே முன் வைத்தது என்று கூறுகிறார். தத்துவச் சிந்தனையாளர் இராகுல் சாங்கிருத்யாயன். ஆனால், இந்த நாத்திகச் சிந்தனைகளின் மூல நூல்கள் முற்றாக அழிக்கப்பட்டதால் அதற்கு மறுப்புரைகளாக வெளிவந்த பார்ப்பனர்களின் வடமொழி நூல்களிலிருந்து தான் அக்கருத்துகளைத் தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது.

மத்துவர் எழுதிய 'சர்வதரிசன சங்கிரகம்'. 'ஹரிபத்திர ஆரி' எழுதிய 'சுதா தரிசன சமுக்கியம்' என்று ஏராளமான சார்வாக எதிர்ப்பு நூல்களை வேதங்களை நியாயப்படுத்திய பார்ப்பனர்கள் எழுதிக் குவித்தார்கள். அந்த மறுப்புகளுக்குள்ளேதான் 'சார்வாக' சிந்தனைகள் மூழ்கிக் கிடந்தன.

பார்ப்பன வேத மரபு வலியுறுத்திய 'உயிர்ப்பலி'யை எதிர்த்த சமணம். கடவுளையும் எதிர்த்தது. உலகமே படைக்கப்பட்டதல்ல என்கிறபோது எப்படி உலகத்துக்கு ஒரு படைப்பவன் இருக்க முடியும்? என்று கேட்டது தான் சமணம்.

கடவுள்தான் மூலம் (Cause). உலகம்-அதன் விளைவு (effect) என்ற வாதத்தை மறுத்த சமணம், விளைவுகள் நிரந்தரமானவையாக இருக்க முடியாது. அது சில காலம் இருக்கலாம். சில காலம் இல்லாமலும் போகலாம்: ஆனால், உலகம் நிரந்தரமாக இருக்கும்போது, அது எப்படி 'விளைவாக' இருக்க முடியும்? என்ற கேள்வியை எழுப்பியது.

ஆரியப் பார்ப்பன வேதங்களுக்கு எதிராக வீடுகளைத் துறந்து வெளியேறி மக்களைச் சந்தித்து, அதன் கேடுகளை எடுத்துச் சொன்னவர்களும் உண்டு. 'நாடோடி களாக வாழ்ந்த அவர்கள், 'பரிவிராஜகர்கள்' என்று அழைக்கப் பட்டனர். அதேபோல், வேத பார்ப்பனியத்துக்கு எதிராக எழுந்த பவுத்தம் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. கடவுளைப் பற்றி புத்தர் பேசவில்லை. புத்த மார்க்கம் எந்தக் கடவுளையும் முன்னிறுத்தவும் இல்லை. வேத மரபு வலியுறுத்திய 'பிரம்மம்' என்ற கருத்து அறிவுபூர்வமானது அல்ல என்று புத்தர் மறுத்தார். மூன்று வேதங்களையும் முறையாகக் கற்றவர்கள் 'பிரம்ம'த்தை நேரில் கண்டிருக்கிறார்களா? 'பிரம்மத்தை' நேரில் அறியாதவர்கள், அதை அடைவதற்கான நெறிமுறைகள் மட்டும் தங்களுக்குத் தெரியும் என்று கூறுவது அறியாமையல்லவா? என்று பார்ப்பனர்களை நோக்கி கேட்டார். வேத வேள்வி சடங்குகளை நிறுத்த மக்களை திரட்டினார். ஆனாலும் அவருக்குப் பிறகு புத்த மார்க்கத்திலும் பார்ப்பனியம் நுழைந்தது. புத்தரின் உண்மையான 'வேத மறுப்பு' சிந்தனைகளைச் சிதைத்தது. இப்படி பார்ப்பன வேதங்களுக்கு எதிராக வரலாறு நெடுக இயக்கங்களும் சிந்தனைகளும் பீறிட்டுக் கிளம்பின.

இந்த சிந்தனை மரபுகள் 'இந்து' மதத்தின் ஒரு அங்கமாக சித்தரிக்கப் படுவதும்கூட வரலாற்றுப் பிழை. 'இந்து மதம்' என்று பெயர் சூட்டப்பட்டதே பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்தான். இதை காஞ்சி மூத்த சங்கராச்சாரியே ஒப்புக்கொள்கிறார்.

"இந்த மண்ணில் தோன்றிய புத்த மார்க்கத்தை இந்த மண்ணிலிருந்தே துடைத்து அழிப்பதில் வெற்றி கண்ட பார்ப்பனியம் பெரியாரியத்திடம் மட்டுமே பலத்த அடி வாங்கியது. அந்த வரலாற்றுப் போராட்டம் தொடருகிறது. இந்த முரண்பாடுகளைக் கூர் தீட்டி, வேத பார்ப்பனியக் கட்டமைப்புகளின் வீழ்ச்சியை நோக்கி மக்களை அணி திரட்டுவதே நமக்கான நாத்திக மரபு"

பார்ப்பன வேதங்களுக்கு எதிரான இயக்கங்கள்- சிந்தனைகள் வரலாறு நெடுக வேதியக் கூட்டத்தின் ஊடுவலாலும் கருத்துச் சிதைப் பாலும் வன்முறை யாலும் வீழ்த்தப் பட்டது. அந்த வரலாற்றை முறியடித்து."கடவுள் இல்லை; இல்லவே இல்லை; கடவுளை கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி" என்ற உச்சக்கட்ட எல்லைக்கு நாத்திக வேத எதிர்ப்பு மரபைக் கொண்டு வந்து நிறுத்திய ஒரே வரலாற்று நாயகர் பெரியார்தான். பெரியார் தொடங்கிய இயக்கம்தான் வேத மரபின் ஆணிவேரை அசைத்தது.

அதுமட்டுமல்ல. வேத எதிர்ப்பு நாத்திகத்தை மக்கள் இயக்கமாக்கி, அவை. 'சூத்திரர்'. 'பஞ்சமர்'களுக்கு மறுத்த உரிமைகளை மீட்டெடுக்கும் போரில் பெரும் வெற்றி கண்ட ஒரே தலைவரும் பெரியார்தான்.

இந்த மண்ணில் தோன்றிய புத்த மார்க்கத்தை இந்த மண்ணிலிருந்தே துடைத்து அழிப்பதில் வெற்றி கண்ட பார்ப்பனியம் பெரியாரியத்திடம் மட்டுமே பலத்த அடி வாங்கியது. அந்த வரலாற்றுப் போராட்டம் தொடருகிறது. இந்த முரண்பாடுகளைக் கூர் தீட்டி, வேத பார்ப்பனியக் கட்டமைப்புகளின் வீழ்ச்சியை நோக்கி மக்களை அணி திரட்டுவதே நமக்கான நாத்திக மரபு. அதுவே நாம் நடத்தும் நாத்திகர் விழாக்கள். காவல்துறை அலுவலகத்தில் ஊதியம் வாங்கும் சில நபர்களுக்கு இந்தக் கருத்துக்களின் வலிமை புரியாது.

நீதிமன்றம் தந்த தீர்ப்புகளாவது இவர்களின் கண்களைத் திறக்கட்டும்!

***- புரட்சிப் பெரியார் முழக்கம் 28.08.2014***

Posted at Egmore RMS, Pathirika Channel,Chennai-08.
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஊரையும் சேரியையும் இணைத்த ‘மாதிரிமங்கலம் புரட்சி’

***இப்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் இருக்கும் மாதிரி மங்கலம் என்ற பார்ப்பனர்கள் தானம் பெற்ற ஊரில் பெரியார் இயக்கம் நடத்திய ஜாதி ஒழிப்பு புரட்சி பற்றி கடந்த இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி...***

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர். அம்பேத்கரின் ‘மகர்’ போராட்டத்தை மாதிரிமங்கலத்தில் சத்தமில்லாமல் செய்துகாட்டிய துரைசாமி அத்தோடு நிற்கவில்லை. பண்ணையார்களுக்கு எதிராகவும், பார்ப்பனர்களுக்கு எதிராகவும் தொடர்ந்த சுயமரியாதைப் போராட்டத்தால், 1960-களில் அங்கே இருந்த தலித் மக்கள் இறப்புக்குப் பறை அடிக்கச் செல்வதை நிறுத்தினர். இறந்துபோன மாட்டை தூக்கச் சொல்வதும் வழக்கொழிந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் சட்டை அணிந்தனர், காலில் செருப்பு போட்டனர், ஊர்த்தெருவுக்குள் நடக்கத் தொடங்கினர். குத்தகை பார்த்த பிற்படுத்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்த இருவரை, ராமாமிர்தம் அய்யர் வீட்டு முற்றத்தில் கட்டி வைத்த செய்திகேட்டு, இருவரையும் மீட்ட துரைசாமி, அந்த வீட்டையே கொளுத்தி விட்டார்.

இச்செயல்களால் கொந்தளித்துப்போன பண்ணையார்கள், துரைசாமியோடு நெருக்கமாக இருந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மணிவேலை வெட்டிக் கொன்றனர். அந்தப் பழியை துரைசாமி மீதே போட்டு, சிறையில் தள்ளினர். சட்டப் போராட்டம் நடத்தி, துரைசாமியை மீட்டார் பெரியார். வெளியே வந்து, தன் நண்பர் மணிவேலின் பெயரிலேயே ஆதிக்கவாதி களுக்கு மரண அடி கொடுத் தார் துரைசாமி. மாதிரிமங்கலத்தில் ஊரும் சேரியையும் இணைப்பதென்று முடிவெடுத்தார். முதற்கட்ட மாக 10 தாழ்த்தப்பட்ட குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, ஊர்த்தெருவுக்கு மத்தியில் மந்தக்கரை என்ற பகுதியில் குடியமர்த்தினார். சமத்துவபுரங்களை தவிர்த்துவிட்டு, இப்படியொரு வரைபடத்தை இந்தியாவில் இன்றும் எங்கும் பார்க்க முடியாது. ஆனால், 60-களிலேயே இதை அதிரடியாக நிகழ்த்திக் காட்டினார். அந்தக் குடியிருப்புக்கு தனது நண்பர் மணிவேல் பெயரைச் சூட்டினார்.

மறுநாள் காலையில் ஊர் கூடி எதிர்க்க, கூட்டத்தில் 200-க்கும் மேற்பட்டோரை ஆயுதங்களோடு நிற்க வைத்துவிட்டு, “வீடில்லாத ஏழைகள் இங்கே குடியேறியதால், யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. யாராவது எதிர்த் தாலோ, எதாவது செய்தாலோ இவர்களுக்காக சிறைக்குப் போவதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை” என்று எச்சரித்தார். என்ன செய்வதென்றே தெரியாமல் கலைந்தது கூட்டம். பாதுகாப்புக்காக சில நாட்களே மணிவேல் நகர் வாசலிலே தூங்கினார் துரைசாமி. அதுநாள் முதல் அவர் ‘என்.டி.சாமி’ என்றாகிவிட்டார்.

அடுத்து, 1962-இல் ஊராட்சி மன்றத் தலைவராகி, காவிரி நகர், காமராஜர் என்ற புதிய நகர்களை உருவாக்கி, அதில் கன்னி யம்மன் தெரு, மேட்டுத்தெரு காலனி மக்களை அங்கு குடியமர்த்தினார். மாதிரி மங்கலத்தில் தனியார் உதவியோடு பள்ளிகளைத் தொடங்கி, பின்னர் அதை அரசே ஏற்று நடத்தும்படி செய்தார். அங்கு பெரும்பாலா னோர் படித்திருக்கி றார்கள். என்.டி.சாமியின் வீட்டுத் திருமணத்தில் தாய்மாமன் சீர், தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டிலிருந்து வந்தது. 50 ஆண்டுகளைக் கடந்துவிட்டோம் அங்கிருந்து... 1978-லேயே என்.டி.சாமி மறைந்துவிட்டார். ஆனால், இப்போதும் மாதிரிமங்கலத்தில் நாவிதர், வண்ணார், ஆதிதிராவிடர், வன்னியர், இஸ்லாமியர் சமூகங்கள் ஒன்றாக அருகருகே வசிக்கிறார்கள். அவர்களுக்குள் எந்தவித பேதமும், மோதலும் இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் செத்த மாடு தூக்குவதோ, பறை அடிப்பதோ இன்றும் கிடையாது.

***-ர.பிரகாசு முரசொலியில் எழுதியது.***

## இலக்கியா-பிரகாஷ் ஜாதி மறுப்பு இணையேற்பு விழா!

பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தோழர்கள் இலக்கியா-பிரகாஷ் சுயமரியாதை ஜாதி மறுப்பு இணையேற்பு நிகழ்வு புதுவை அரியாங்குப்பத்தில் நடைபெற்றது.



காசு.நாகராசன் (அமைப்பு செயலாளர், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை) வாழ்த்துரை வழங்கினார். சடங்குகளால் மணமக்கள் படும் தொல்லைகளை, அவமதிப்புக்களை எடுத்துரைத்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி இணையேற்பை நடத்தி வைத்து மந்திரங்கள் அதன் வழியாக சடங்குகள் மூலம் அடிமைத்தனத்தைத் திணிக்கும் பார்ப்பன புரோகித திருமண முறையும், எவ்வித சடங்குகள் இல்லாமல் நடைபெறும் சுயமரியாதைத் திருமணம் பற்றி விளக்கிப் பேசினார்.

நிறைவாக மணப்பெண் இலக்கியா பேசுகையில் “பெற்றோர்கள் பிள்ளைகளை ஆசை ஆசையாக வளர்க்கிறார்கள் ஆனால் அவர்களின் சுய விருப்பத்தை மட்டுமே ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ஜாதி, மதத்தை காரணம் காட்டி பல பேர் இல்லறம் சரியாய் அமைவதில்லை. ஆகவே பெற்றோர்களுக்கு ஒரு வேண்டுகோள். பிள்ளைகளின் சுய விருப்பத்தை பாருங்கள், ஜாதி, மத, சொந்தக்காரர்கள் சொல்வதைக் கேட்காதீர்கள்.

என்னுடைய குடும்பம் ஆச்சாரமான கடவுளை நம்பும் குடும்பம். ஆனால் இன்றைக்கு என்னுடைய விருப்பத்தை ஏற்று இந்த ஜாதிமறுப்பு இணையேற்பை நடத்துகிறார்கள்”.

மணமகன் பேசுகையில் கணவனை இழந்த பெண்கள் திருமண நிகழ்வில் ஒதுக்கிவைக்கும் புரோகித திருமணத்தை விட கணவனை இழந்த பெண் என்னுடைய தாயார். அவர் அருகிலேயே மேடையில் இந்த சுயமரியாதை திருமணம் நடக்கிறது என்று கூறினார். புதுவை தீனா நிகழ்வை ஒருங்கிணைத்தார். கழகத் தோழர்கள் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண், கடலூர் சிவா மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.2000 மணமக்கள் வழங்கினர்.

## புலிகளின் தளபதி பொட்டு அம்மான்: வரலாற்று நூல் கழகத் தலைவர் வெளியீட்டார்

தாய் தமிழர் இயக்கம் நடத்திய அறிவரண் தளபதி பொட்டு அம்மான் வரலாற்று நூல் வெளியீட்டு விழா மற்றும் பொதுக்கூட்டம் சென்னை செங்குன்றத்தில் டேவிட் பெரியார் தலைமையில் நடைபெற்றது.

நூலை வெளியிட்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நூலை பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கிய இனமுரசு சத்யராஜ், நூலை மதிப்புரை ஆற்றிய திவிக-புதுவை மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன், நூலைப் பற்றி அறிமுக உரை மேச்சேரி தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர்.



திருவல்லிக்கேணி பகுதியில் உயர்நீத்த கழகத் தோழர்கள் பத்ரி நாராயணன், தமிழரசு, கண்ணன், குமார் ஆகியோரின் குடும்பத்தினர் நூல்களை பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்விற்கு கழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர். தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, துணைச் செயலாளர் இராவணன், இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் ரவி பாரதி மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## மலக்குழி சாவுகள் தொடரக்கூடாது

### பால்.பிரபாகரன் வலியுறுத்தல்



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் பாதாள சாக்கடை அகற்றும் பணியில் ஈடுபட்ட ஊழியர் பாதாள சாக்கடையின் விஷவாயு தாக்கி கங்கைகொண்டான் - ஆலடிப்பட்டியை சேர்ந்த தூய்மை பணியாளர் சுடலைமணி (வயது 40) என்ற தூய்மை பணியாளர் கடந்த 08.06.2025ல்உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை: பாதுகாப்பற்ற முறையில் ஒப்பந்த தூய்மை பணியாளரை எவ்வித பாதுகாப்பு கருவியுமின்றி பாதாள சாக்கடைக்குள் இறக்கி தூய்மைப் பணி செய்ய வைத்துள்ளனர். மனிதக்கழிவை மனிதன் அகற்றத் தடை மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013 இருந்தும் அச்சட்டம் மிகத் தெளிவாக மனிதனைப் பாதாள சாக்கடை மற்றும் மனிதக் கழிவு குழிக்குள் இறங்கத் தடை விதித்து இருந்தும் அந்த சட்டத்தை உள்ளாட்சி அமைப்புகள் சற்றும் சட்டை செய்யாமல், மனிதர்களை பாதாள சாக்கடைக்குள் எவ்வித பாதுகாப்பு கருவிகள் கூட இல்லாமல் இறக்குவதும் அதனால் மனித உயர்கள் பலியாவதும் வாடிக்கையாகிவிட்டது.

நீதிமன்றங்கள் இச்செயல்பாடுகளைக் கண்டித்து பல தீர்ப்புகளை தந்து இருந்தும் அதனைப் பொருட்படுத்தாது செயல்படுவது சட்ட விதிமீறலாகும்.மனித நேயமே இல்லாமல் இன்று வேலை நடந்தால் போதும் என்கின்ற நிலையில் செயல்படுகிறார்கள். பெரும்பாலும் தூய்மைப் பணியாளர்கள் பட்டியல் வகுப்பினராக இருப்பதால் அதிகாரிகளும், தூய்மை பணியினை செய்ய ஒப்பந்தம் செய்துள்ள நிறுவன ஊழியர்களும் ஜாதியப் பார்வையோடு கையாள்வது தெரிகிறது.

டிஜிட்டல் உலகமாக மாறிவரும் நிலையில் / கம்யூட்டர் யுகமாக மாறிய நிலையில் பாதாள சாக்கடை அடைப்பு எடுப்பதற்கு ஒரு கருவியை வாங்க முடியவில்லை தூய்மைத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி லட்சம் லட்சமாக சம்பாதிக்கும் நிறுவனங்கள் இந்த மனித அவலத்தை பற்றி கண்டு கொள்வதில்லை.

ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களுக்கு அரசு நிர்ணியத்த கூலியை விட மிக குறைந்த கூலியை கொடுப்பதும், தூய்மைத் தொழிலாளர்களுக்கு பிராவிடன்ட் பண்ட் செலுத்தாமல் தொகையை நிலுவை வைத்தும் தூய்மைத் தொழிலாளர் உழைப்பை சுரண்டும் இந்த நிறுவனங்களை கண்டுகொள்ளாத உள்ளாட்சி அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் இது போன்ற பாதாள சாக்கடை விசவாயு சாவுகள் தொடருகின்றன.

இந்தியாவில் முன்னேறிய மாநிலமாக திகழும் தமிழ்நாடு மலக்குழி மரணம் விசயத்தில் இந்தியாவில் 2-வது இடம் வகிப்பது. தமிழர்களுக்கு மிகப் பெரிய அவமானமாகும்.

திருச்செந்தூர் தூய்மைப் பணியாளர் சாவுக்கு காரணமான நகராட்சி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இறந்த சுடலை மணியின் சாவிற்கு நீதி வேண்டும், சுடலை மணி குடும்பதிற்கு உடனடியாக நிவாரண தொகை வழங்க வேண்டும், குடும்பத்திலுள்ள ஒருவருக்கு கல்வி தகுதி அடிப்படையில் அரசுப் பணி வழங்கிட வேண்டும் என திராவிடர் விடுதலைக்கழகம் சார்பில் தமிழ்நாடு அரசிற்கு வலியுறுத்துகிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 20, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran